**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் தைத்திங்கள் 14-ம் நாள்

2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.1/2021

இன்

அசல் வழக்கு எண்.125/2013

(CNR.No.TNTR21-000043-2013)

...

B. முனிரத்தினம் நாயுடு ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. யசோதாம்மா (இறந்துவிட்டார்)
2. கஸ்தூரி
3. முனியம்மா
4. துரைசாமி மந்தடி (இறந்துவிட்டார்)
5. வெங்கடேசலு
6. வேலு
7. செங்கம்மா
8. சாந்தி
9. வட்டாட்சியர், திருத்தணி
10. வருவாய் கோட்டாட்சியர், திருத்தணி
11. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்
12. தலைமை நிலஅளவையர், திருத்தணி ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 09.01.2025ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி P.C. சந்தியாராணி அவர்கள் முன்னிலையாகியும், 1, 4ம் எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், 2, 3, 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. கிஷோர் ரெட்டி, E. விஜயகுமார், A. அகிலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதரப்பாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கு எண்.90/2015 முடியும் வரை இந்த வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க உத்தரவிட கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 10-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம்:-</u>**

அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்

கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 5 பிரதிவாதிகள் நிலத்திற்கு தெற்கு பக்கம் வழக்கு சொத்து உள்ளது. 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வடக்கு பக்கமுள்ள புல எண்.188/5, 188/6 ல் உள்ளவை பட்டா நிலம் என உரிமை கோருகிறார்கள். வழக்கு சொத்து புல எண்.188/4 ஆகும். 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.90/2015 ஐ, புல எண்.188/4 ஐ பொறுத்து மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு எண்.90/2015 பகுதி விசாரணையில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில் அசல் வழக்கு எண்.90/2015 முடிந்துவிடும். இந்த வழக்கிலுள்ள சங்கதிகள் நேரடியாகவும், போதுமான அளவும் அசல் வழக்கு எண்.90/2015 ல் உள்ளதின் தொடர்ச்சியாகும். எனவே அசல் வழக்கு எண்.90/2015 முடியும் வரை இந்த வழக்கை நிறுத்தி வைக்க கோரி மனுதாரரால் இம்மனு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மறுப்புரையின் சுருக்கம்:-</u>

மனு பொய்யானது. பத்தி 3 ல் உள்ளதில் பகுதி சரி, பகுதி சரியல்ல. அசல் வழக்கு எண்.95/2015 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பது உண்மை. மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. அசல் வழக்கு எண்.95/2015 பகுதி விசாரணையில் உள்ளது என்பது உண்மை. மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வழக்கு சொத்தில் உரிய ஆவணங்கள் மூலம் மனுதாரர் தனது அனுபவத்தை நிரூபிப்பதற்கு மாறாக இம்மனு தாக்கல் செய்துள்ளார். இது தேவையானது அல்ல. அசல் வழக்கு எண்.90/2015 ல் உள்ள வழக்கு சொத்தும் இவ்வழக்கு சொத்தும் வேவ்வேறானவை. எனவே அசல் வழக்கு எண்.90/2015 முடியும்வரை இந்த வழக்கை நிறுத்தி வைக்க தேவையற்றது. இந்த மனுவில் எந்த நல்லெண்ணமும் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>தீர்வு:-</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. இந்நீதிமன்றத்தில் இந்த வாதி, பிரதிவாதிகளுக்கிடையே அசல் வழக்கு எண்.90/2015 ஆனது புலஎண்.188/4 ஐ பொறுத்து தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், எனவே அந்த வழக்கு முடியும்வரை இவ்வழக்கை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியம் என்று கூறி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. கற்றறிந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருவழக்கு சொத்தும் வேறுவேறானது என்றும் மனுதாரர் குறுக்கு வழியில் வழக்கை காலங்கடத்தும் நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதிடப்பட்டது.

5. மனுதாரர் தனது மனுவிலேயே அசல் வழக்கு எண்.90/2015 புல எண்.188/4 ஐ பொறுத்து நிலுவையில் உள்ளதாக கூறியுள்ளார். இவ்வழக்கானது

புல எண்.188/5, புல எண்.188/6 ஐ பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பிராதை பார்க்கும்போதே தெரிய வருகிறது. இவ்விரு வழக்குகளும் வேறுவேறு சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்துள்ள நிலையில் அசல் வழக்கு எண்.90/2015 முடியும் வரை இவ்வழக்கு விசாரணையை நிறுத்தி வைப்பது தேவையற்றது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு 2, 3, 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi
27.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

Sd/- R.D. Gurulakshmi
27.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.